முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

தரம் 5 முன்னோடிப் பரீட்சை தரம் 5 முன்னோடிப் பரீட்சை தரம் 5 முன்னோடிப் பரீட்சை

# இறுதி முன்னோடிப் பரீட்சை 2022

**தரம் 05**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

## வினாத்தாள் - I

**நேரம் - 1 மணித்தியாலம்**

சுட்டெண் - ..........................................................

**திரு. செ. வினோத்குமார்**
**யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை**

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உங்கள் **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- **மூன்றாவது பக்கத்தில்** குறித்த இடத்திலும் உங்களது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 40 வினாக்கள் உள்ளன. எல்லா வினாக்களிற்கும் உரிய சரியான விடையின் கீழ்க் கோடிடுக.
- 1 தொடக்கம் 40 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

**விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்**


| பக்க இலக்கம் | புள்ளி |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்த புள்ளிகள் | |
| ☐ X $2\frac{1}{2}$ = ☐ புள்ளிகள் | |
| சொற்களில் | |


| முதலாவது பரீட்சகர் | ஒப்பம் |
|---|---|
| புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்ட தென சான்றுப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர் | |
| முதலாவது பரீசிலனையின் மதீப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன் | |
| கணித பரீட்சகர் | |
| மதீப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | |
| பிரதம பரீட்சகர் | |
| மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | |


PAPERMASTER.LK


பக்கம் 2 ஐ பார்க்க


- 1ம், 2ம் வினாக்களில் தொடக்கத்தில் தரப்பட்டுள்ள உருவைப் பூரணப்படுத்துவதற்குப் பொருத்தமான பகுதியை தெரிவு செய்க.


1) 



(1) 


(2) 

(3) 


2) 


(1) 


(2). 


(3) 


- 3, 4 ஆகிய வினாக்களில் வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய பொருத்தமான உருவைத் தெரிக.


3) 



(1) 


(2) 

(3) 

4) 


(1) 

(2) 

(3) 

PAPERMASTER.LK

- 5,6 ஆகிய வினாக்களில் தரப்பட்டுள்ளவற்றில் நான்கு சொற்கள் ஏதோ ஒரு வகையில் தொடர்புபட்டதாகும். ஒரு சொல் வேறுபட்டதாகும். அவ் வேறுபட்ட சொல்லினைத் தெரிவு செய்க.


5) ஆளுனர், அரசாங்க அதிபர், மாவட்ட செயலாளர், பொதுச் செயலாளர், அமைச்சர்


(1) அமைச்சர் (2) ஆளுனர் (3) மாவட்ட செயலாளர்

6) மைதானம், கிரிக்கெட், சதுரங்கம், உதைபந்தாட்டம், எல்லே

(1) எல்லே (2) கிரிக்கெட் (3) சதுரங்கம்

- 7,8 ஆகிய வினாக்களில் சதுர வடிவக் கடதாசித்துண்டு ஒன்றை நான்காக மடித்து அதன் ஒரு பக்கத்தின் வழியே ஒரு சிறு துண்டு வெட்டி எடுக்கப்பட்ட விதத்தை படம் காட்டுகின்றது. கடதாசியினை விரிக்கும் போது பெறும் வடிவத்தை தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

7) 

8) 

9) பின்வரும் பாடலை வாசித்து கேட்கப்பட்ட வினாவிற்கு விடையினைத் தெரிவு செய்க.

**"என்னால் இது செய்ய முடியாது " - எனும்**

**எதிர்மறைப் பேச்சை விட்டு விடு!**

**"என்னால் எது செய்ய முடியாது?" - எனும்**

**ஏத்த கேள்வி கேட்டு விடு!.**

மேலே குறிப்பிட்ட பாடலின் பிரதானமான கருத்து யாது?

(1) முயற்சி செய்யாமல் வெற்றி பெற வேண்டும்.

(2) யாரிடமும் உதவி கேட்டு வெற்றி பெற வேண்டும்.

(3) தன்னம்பிக்கையே எமது முதல் தைரியம் ஆகும்.

PAPERMASTER.LK

10) “மன்னனும் மாசறக் கற்றோனும் சீர்தூக்கின்
மன்னனிற் கற்றோன் சிறப்புடையவன்.”

மேற்குறிப்பிட்ட மூதுரையில் கூறப்பட்டுள்ள பிரதான கருத்து யாது?


(1) மன்னன் எங்கு சென்றாலும் பெருமையுடையவன்.

(2) கல்வி கற்றவருக்கு எங்கு சென்றாலும் மதிப்பு உண்டு.

(3) கல்வி கற்றவரை விட மன்னருக்கே சிறப்புண்டு.

11) நசீர் தனது வாழ்க்கையில் நிறைய துன்பங்கள் அவனை வாட்டினாலும் நசீர் அவற்றை எல்லாம் எதிர்த்துப் போராடி வாழ்க்கையை வெற்றி பெற்றான். இதற்குப் பொருத்தமான மரபுத்தொடராக விளங்குவது எது?

(1) எதிர்நீச்சல் (2) தலைகீழாய் நடத்தல் (3) கடனைத் தீர்த்தல்

12) 

அருகில் உள்ளவாறு மூன்று முக்கோணங்களை உருவாக்க ஏழு தீக்குச்சிகள் தேவை. எனின் அதே வரிசையில் 10 முக்கோணங்களை உருவாக்க எத்தனை தீக்குச்சிகள் தேவை?

(1) 22 தீக்குச்சிகள் (2) 20 தீக்குச்சிகள் (3) 21 தீக்குச்சிகள்

13) 3, 4 ஆகிய இரு இலக்கங்களாலும் வகுபடக்கூடிய 48ற்கும் 95ற்கும் இடைப்பட்ட எண்கள் எத்தனை உள்ளன?

(1) 3 தடவை (2) 5 தடவை (3) 7 தடவை

14) 2019ம் ஆண்டு தை மாதம் புதன்கிழமை எனின் அவ்வருடத்தின் சித்திரை மாதம் 6ம் திகதி என்ன கிழமை?

(1) வியாழக்கிழமை (2) திங்கட்கிழமை (3) ஞாயிற்றுக்கிழமை

● பின்வரும் குறியீடுகளுக்கு △ = 6, ■ = 4, ○ = 9, ▬ = 5, ✡ = 8, ∗ = 0, ● = 1 என்ற பெறுமதிகள் தரப்பட்டுள்ளது. அதனை அவதானித்து கேட்கப்பட்ட கணிதச் செய்கையை கணித்து விடையைக் காண்க.

15)

|   | ✡ | ▬ | ■ |
|---|---|---|---|
| + | △ | ○ | △ |
|   | 15 | 5 | 0 |

(1) ● ▬ ▬ ∗

(2) ○ ▬ ■ ●


(3) ▬ ▬ ○ ○

16) ▬ X ✡ - ■ = ? (1) 34 (2) 40 (3) 36

PAPERMASTER.LK

17) சங்கர் ஏணியில் ஏறி விளையாடிக்கொண்டிருந்தான். அவன் நான்கு படி ஏறியதும் இரண்டு படி கீழே இறங்குவான். ஏணியில் மொத்தம் 12 படிகள் உள்ளன. சங்கர் உச்சிக்கு சென்றடைந்ததும் எத்தனை படிகள் இறங்கியிருப்பான்?

(1) 8 படிகள் (2) 10 படிகள் (3) 6 படிகள்

18) 

இவ்வுருவில் எத்தனை சதுரங்கள் காணப்படுகின்றன?

(1) 10 சதுரங்கள்

(2) 14 சதுரங்கள்

(3) 12 சதுரங்கள்

19) கவிதாவின் நிறை தந்தையின் நிறையின் அரைவாசி ஆகும். கவிதாவின் தம்பியின் நிறை கவிதாவின் நிறையிலும் பத்து கிலோகிராம் அதிகமாகும். தம்பியின் நிறை 33.5kg எனின் தற்போது மூவரின் நிறையின் மொத்தம் யாது?

(1) 104.5kg (2) 89kg (3) 104kg

20)

| | | | | |
|---|---|---|---|---|
| Q | P | O | N | M |
| R | ..... | ..... | C | L |
| S | ..... | ..... | D | K |
| T | G | H | I | J |
| U | V | W | X | Y |

வெற்றிடத்தில் வரவேண்டிய கூட்டினைத் தெரிவு செய்க.

(1)

| | |
|---|---|
| A | B |
| E | F |

(2)

| | |
|---|---|
| A | B |
| F | E |

(3)

| | |
|---|---|
| B | A |
| E | F |

21) தரப்பட்டுள்ள அடைப்புக்குள்ள எண்கோலத்தை இனங்கண்டு வெற்றிடத்திற்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவு செய்க.

| | |
|---|---|
| 12 | 20 |
| 35 | 43 |

| | |
|---|---|
| 71 | 44 |
| 50 | 23 |

| | |
|---|---|
| 17 | 26 |
| 20 | 29 |

| | |
|---|---|
| 67 | 49 |
| ?... | 24 |

(1) 35

(2) 44

(3) 42

22) விமலா காய்ச்சல் காரணமாக வைத்தியரிடம் சென்றதால் வைத்தியர் விமலாவிற்கு ஒரு நாளைக்கு இரண்டு வேளை மூன்று மாத்திரைகள் வீதம் 36 மாத்திரைகளை வழங்கினார். அவ்வாறு வைத்தியர் வழங்கிய மாத்திரைகள் எத்தனை நாட்களுக்கு போதுமானதாக இருந்தது?

(1) 12 நாட்கள் (2) 6 நாட்கள் (3) 4 நாட்கள்

PAPERMASTER.LK


23) தொடருந்து ஒன்று 45வது கிலோமீற்றர் கல்லில் இருந்து 50வது கிலோமீற்றரைக் கடப்பதற்கு 5 நிமிடம் எடுத்தது. தொடருந்து அதே வேகத்தில் சென்றால் 90வது கிலோமீற்றர் கல்லைக் கடப்பதற்கு மேலும் எவ்வளவு நேரம் எடுக்கும்?


(1) 40 நிமிடம் (2) 35 நிமிடம் (3) 50 நிமிடம்


24) பாத்திமா வரிசை ஒன்றில் நிற்கின்றாள். முன்னாலிருந்து பார்க்கும் போது நான்காவதாகவும் பின்னாலிருந்து பார்க்கும் போது 10வதாகவும் நின்றாள். வரிசையின் நடுவில் முபராக் நின்றான். முபராக் எத்தனையாவதாக நிற்கின்றான்?


(1) எட்டாவதாக (2) ஆறாவதாக (3) ஏழாவதாக

25) ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு இங்கு காணப்படுகின்றது. அதன் முகங்களில் எண்கள் குறிக்கப்பட்டுள்ளன. இதனை ஒரு சதுரமுகியாக தயார் செய்யும் போது எதிர் முகங்களில் இருக்கும் எண்களுக்கிடையே ஒரு தொடர்பைக் காணலாம். அதனைத் தெரிவு செய்க.






(1)




(2)



(3)



26) கிரிக்கெட், உள்ளக விளையாட்டுக்கள், டெனிஸ், உதைபந்தாட்டம் ஆகியவற்றுக்கிடையே உள்ள தொடர்பு பின்வரும் உருவில் வகைக்குறிக்கப்பட்டுள்ளது. அதனை தெரிவு செய்க.

(1)


(2)


(3)


27) ராமிடமும் ரவியிடமும் உள்ள பணத்தொகையானது ரவியை விட ராமிடம் மேலதிகமாக ரூபா 180.00 உள்ளது. இருவரிடம் உள்ள பணத்தொகை ரூபா 960.00 ஆகும். எனின் ராமிடம் உள்ள பணத்தொகை எவ்வளவு?


(1) ரூபா 570.00 (2) ரூபா 390.00 (3) ரூபா 480.00

28) 3.40 மணிக்கு மணி முள்ளுக்கும் நிமிட முள்ளுக்கும் இடையேயான கோணம்?

(1) விரிகோணம் (2) செங்கோணம் (3) கூர்ங்கோணம்

PAPERMASTER.LK

● கண்ணாடிக் குவளையில் நீரின் கனவளவுகள் தரப்பட்டுள்ளன. ஒவ்வொன்றும் வேறு வேறு அளவுடையன.




நான்கு பாத்திரங்களிலும் உள்ள நிறையைப் பின்பற்றி வினாக்களுக்கு விடையைத் தெரிக.

29) குவளை C ல் உள்ள நிரை சமப்படுத்துவதற்கு குவளை D ல் உள்ள நீரின் அளவில் எத்தனை மடங்கு ஊற்ற வேண்டும்.

(1) 16 தடவை (2) 12 தடவை (3) 15 தடவை

30) நான்கு குவளைகளிலும் உள்ள நீரின் மொத்த அளவு யாது?

(1) 7770ml (2) $7\frac{3}{4}l$ (3) $6\frac{3}{4}l$

31)

| | | |
|---|---|---|
| 5 | 9 | 6 |
| 4 | 7 | 6 |
| 3 | 8 | 3 |
| 6 | 8 | ? |

வினாக்குறி இடப்பட்ட இடத்தில் வரவேண்டிய எண் யாது?


(1) 11

(2) 9


(3) 8


32) ஒரு பலகையில் S T U D E N T என்பதை T U T D N E S என்று எழுதப்பட்டால் S O U R C E S என்பதை எவ்வாறு எழுதப்பட்டிருக்கும்?


(1) S O U R C E S (2) S O U R E S (3) S U O R E C S

33) 

முப்பரிமான உருவை அமைப்பதற்குரிய சரியான வடிவத்தைத் தெரிவு செய்க.

(1) 

(2) 

(3) 

PAPERMASTER.LK

34)

| | | | கொழும்பு |
|---|---|---|---|
| | | புத்தளம் | 124 |
| | வவுனியா | 130 | 254 |
| யாழ்ப்பாணம் | 144 | 274 | 398 |

km

யாழ்ப்பாணத்திலிருந்து கொழும்பை சென்றடைவதற்கான தூரம் எவ்வளவு?

(1) 398km
(2) 274km
(3) 498km

35) விசுக்கோத்து பைக்கற் ஒன்றின் நிறை 125g ஆகும். ஆசிரியர் தனது வகுப்பு பிள்ளைகள் 35 பேருக்கு வழங்கினால் எனின் ஆசிரியர் வழங்கிய விசுக்கோத்து பைக்கற்றின் மொத்த நிறை யாது?

(1) 4kg 735g (2) 4735g (3) 4kg 375g

36) வகுப்பொன்றிலுள்ள 36 மாணவர்களின் 5 பேர் மாணவ தலைவர்களுக்காக போட்டியிட்டனர். அவர்களில் ஒருவர் வெற்றி பெறுவதற்கு பெறவேண்டிய குறைந்த பட்ச வாக்குகளின் எண்ணிக்கை யாது?

(1) 8 (2) 12 (3) 7

37) லண்டனில் நேரம் பகல் 1.00மணி ஆக இருக்கும் போது இலங்கையில் நேரம் பி.ப 6.30மணி ஆகும். அதன்படி இலங்கையில் நேரம் பி.ப 8.00மணி ஆக இருக்கும் போது லண்டனில் என்ன நேரமாக இருக்கும்?

(1) நேரம் பி.ப 2.30மணி (2) நேரம் பி.ப 2.00மணி (3) நேரம் பி.ப 3.30மணி

38) மாணவன் காலையில் பாடசாலைக்கு கிழக்கில் இருந்து வடக்கு நோக்கி பயணிக்கும் போது அவனது நிழல் விழும் திசை யாது?

(1) வலது கைப்பக்கம் (2) இடது கைப்பக்கம் (3) முன் பக்கம்

39) பின்வரும் வாக்கியங்களுள் சரியான கருத்தைப் புலப்படுத்தும் வாக்கியத்தைத் தெரிவு செய்க.

(1) பெரும் நீர்ப்பற்றாக்குறை ஒன்றிற்கு கொடுப்பதனால் எதிர்காலத்தில் மனிதர்கள் காடுகளை அழிப்பர்.

(2) காடுகளை அழிப்பதனால் எதிர்காலத்தில் மனிதர்கள் பெரும் நீர்ப்பற்றாக்குறை ஒன்றிற்கு முகம் கொடுப்பர்.

(3) எதிர்காலத்தில் மனிதர்கள் காடுகளினால் பெரும் நீர்ப்பற்றாக்குறை ஒன்றிற்கு முகம் கொடுத்து அழிவர்.

40) A, B, C, D எனும் நால்வர் விளையாட்டு மைதானத்தில் காணப்பட்டார்கள். அவர்கள் அணிந்திருந்த ஆடைகளின் நிறங்கள் குறித்த விபரம் வருமாறு.

| | |
|---|---|
| A | என்பவர் பச்சை, நீலம் |
| B | என்பவர் நீலம், மஞ்சள் |
| C | என்பவர் மஞ்சள், நீலம் |
| D | என்பவர் நீலம், வெள்ளை |

நால்வரும் அணிந்திருந்த ஆடைகளின் நிறங்கள் எத்தனை?

(1) 4 நிறங்கள் (2) 6 நிறங்கள் (3) 8 நிறங்கள்

PAPERMASTER.LK

முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved

# இறுதி முன்னோடிப் பரீட்சை 2022

**தரம் 05**

மாணவர்களைப் பாடசாலைக்குத் தேர்ந்தெடுப்பதற்கும் மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்கும் தரம் ஐந்து மாணவர்களுக்கு நடாத்தப்படும் பரீட்சைக்கான முன்னோடி வினாத்தாள்.

## வினாத்தாள் - II

**நேரம் - 1 மணித்தியாலம்**

திரு. செ. வினோத்குமார்
யா/ யாழ் இந்து ஆரம்ப பாடசாலை

சுட்டெண் - ..........................................................

பரீட்சைக்குத் தோற்றும் உமக்குரிய அறிவுறுத்தல்கள்

- உங்கள் **சுட்டெண்ணை** மேற்குறித்த அடைப்பினுள் இருக்கும் புள்ளிக்கோட்டின் மீது எழுதுக.
- மூன்றாவது பக்கத்தில் குறித்த இடத்திலும் உங்களது **சுட்டெண்ணை** எழுதுக.
- இவ்வினாத்தாளில் 60 வினாக்கள் உள்ளன.
- விடைகள் எழுதப்பட வேண்டிய இடத்தில் விடைகளை புள்ளிக்கோட்டில் எழுதுக.
- 30 தொடக்கம் 59 வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் கீழே தரப்பட்டுள்ள மூன்று விடைகளிலிருந்து சரியான விடையைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

### விடைத்தாள் பரீட்சகர்களுக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | புள்ளி |
|---|---|
| 02 | |
| 03 | |
| 04 | |
| 05 | |
| 06 | |
| 07 | |
| 08 | |
| மொத்த புள்ளிகள் | |
| இலக்கத்தில் | |
| சொற்களில் | |

| முதலாவது பரீட்சகர் | ஒப்பம் |
|---|---|
| புள்ளி வழங்கும் விதிமுறைக்கேற்ப விடைத்தாள் மதிப்பீடு செய்யப்பட்ட தென சான்றுப் படுத்துகின்றேன். | |
| இரண்டாவது பரீட்சகர் | |
| முதலாவது பரீசிலனையின் மதீப்பீடு சரியானதெனச் சான்று பகிர்கின்றேன் | |
| கணித பரீட்சகர் | |
| மதீப்பீடு வழங்கப்பட்ட புள்ளிகள் மற்றும் இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | |
| பிரதம பரீட்சகர் | |
| மேற்பார்வை செய்வதற்கு இணங்க இறுதிப் புள்ளி சரியானதென தெரிவிக்கின்றேன் | |

PAPERMASTER.LK

பக்கம் 2 ஐ பார்க்க

01) மனிதனும் ஓர் இயற்கை. இயற்கையோடு தொடர்புகொள்ளும் போது மனிதன் ஆற்றல் பெறுகின்றான். இயற்கையோடு இயைந்து வாழ்பவருக்கு இயற்கையானது அறிவாகவோ, ஆற்றலாகவோ, செல்வமாகவோ தன்னை வாரி வழங்குகின்றது. இயற்கையை நேசிப்பவர்களிடம் அன்பு மிகுதியாகும் உள்ளத்தில் அழகு பெருக்கெடுக்கும் ஆர்வம் துளிர்விடும் மகிழ்ச்சி பன்மடங்காகும் புதுமை புலப்படும் கற்பனை மிகும் கண்ணோட்டம் அழகுபெறும் மனம் ஆகாயமாக விரிவடையும்.

☐ **பந்தியை மாத்திரம் துணையாகக் கொண்டு விடையளிக்க.**

**(i)** மனிதன் எச் சந்தர்ப்பத்தில் ஆற்றல் பெறுகின்றான்?

..........................................................................................................................................

**(ii)** ''பழமை'' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக.

..........................................................................................................................................

**(iii)** ''மனதில்'' என்பதன் ஒத்தகருத்துச் சொல்லை எழுதுக. ..........................................................................

**(iv)** இயற்கையோடு வாழ்பவருக்கு இயற்கை எவ்வாறு தன்னை வாரி வழங்குகின்றது?

..........................................................................................................................................

**(v)** இயற்கையை நேசிப்பவர்களின் இயல்பு எவ்வாறு கூறப்படுகின்றது?

..........................................................................................................................................

**(vi)** இப் பந்திக்கு மிகவும் பொருத்தமான தலைப்பைத் தெரிவு செய்து அதன்கீழ்க் கோடிடுக.

1. அறிவும் ஆற்றலும
2. இயற்கையும் மனிதனும்
3. உள்ளத்தின் அழகு

02) **அஃறிணை எதிர்கால ஒருமை வினைச் சொல்லைத் தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

(1) ஒளிர்ந்தன (2) படித்தான் (3) பறக்கும்

03) **தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியம் ஒன்று எழுதுக.**

மெல்லக் / தொடங்கியது / கூட்டம் / கலையத் / பார்வையாளர் / மெல்ல

..........................................................................................................................................

04) **பெண்பால் சொல்லை எழுதுக.**

**(i)** நண்பன் :- ........................................... **(ii)** உழவன் :- ...........................................

05) **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய், பயனிலைத் தொடர்பு சரியாயின் (சரி) எனவும் பிழையாயின் (பிழை) எனவும் எதிரே உள்ள அடைப்புக்குறிக்குள் எழுதுக.**

**(i)** அண்ணா காலையில் சந்தைக்குச் செல்வார்கள். ( )

**(ii)** இரவில் ஆகாயத்தில் சந்திரன் தென்பட்டது. ( )

**(iii)** சிம்ரன் இனிமையான குரலில் பாட்டுப் பாடினாள். ( )

**(iv)** அன்னப் பறவைகள் குளத்தில் நீந்துகிறது. ( )

PAPERMASTER.LK

06) பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் உள்ள சரியான எழுத்துக்கூட்டல் உள்ள சொல்லை அடைப்புக் குறியினுள் இருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.

**(i)** அதிபர் காலைக் கூட்டத்தில் கொரோனா பற்றி ( நிகழ்த்திய / நிகள்த்திய / நிகல்ற்றிய ) உரை மிகவும் பயனுள்ளதாக இருந்தது.

**(ii)** வானியல் தொடர்பாக பல ( அறிவியழாளர்கள் / அரிவியலாளர்கள் / அறிவியலாளர்கள் ) ஆராய்ச்சிகளை நடாத்தினார்கள்.

07) **(i)** பின்வரும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான பழமொழியைப் புள்ளிக் கோட்டில் எழுதுக.

உத்தம நட்பு என்றும் மேலானது.

..............................................................................................................................

**(ii)** பின்வரும் திருக்குறள் அடிகளைப் பூரணப்படுத்துக.

..............................................................................................................................

உள்ளத்து கெல்லாம் உளன்.

08) பின்வரும் வாக்கியத்தை நிகழ்காலத்தில் எழுதுக.

ஆசிரியர்கள் பாடம் நடாத்தினார்கள்.

..............................................................................................................................

09) பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

**(i)** அதிபர் எனக்குப் புத்தகம் குடுத்தார்.

..............................................................................................................................

**(ii)** நான் பரீட்சைப் பெருபேருகள் வெழிவறுவதற்கான காலத்தை காத்துருந்தேன்.

..............................................................................................................................

10) பின்வரும் பழமொழியைப் பூர்த்தி செய்க.

**(i)** போதும் என்ற மனமே ..................................................... செய்யும் மருந்து.

**(ii)** ஊருடன் ..................................................... வேருடன் கெடும்.

11) கீழே தரப்பட்டுள்ள கவிதையை வாசித்து, கேட்கப்பட்டுள்ள வினாவுக்குரிய விடையைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.


சின்னஞ் சிறுவில்லாய்க் கண்டதம்மா! - பின்னர்ச்
செம்பொற் குடம் போல தோன்றுதம்மா!
என்ன அதிசயம் பாராயம்மா! - ஈதோர்
இந்திர சாலமோ கூறாயம்மா!

இப் பாடலில் வரும் உவமானத் தொடரை எழுதுக.

..............................................................................................................................

12) தரப்பட்டுள்ள ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களிலேயே எழுதுக.

**(i)**  ..................................................

**(ii)**  ..................................................

PAPERMASTER.LK

13) கீழே தரப்பட்டுள்ள சொற்களைச் சரியாக ஒழுங்குபடுத்தி கருத்துள்ள வாக்கியமாக்கி எழுதுக.

**(i)** am / my / I / mother / helping :- ..........................................................

**(ii)** fast / very / are / running / They :- ..........................................................


14) "புஸ்தகாலய" என்ற சிங்களச் சொல்லுக்குரிய தமிழ்ச் சொல்லை எழுதுக.

..........................................................

15) பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் சொல்லப்படும் விதத்தினைத் திழிலில் எழுதுக.

கைகளை மேலே உயர்த்துங்கள் :- ..........................................................

16)




எண்சட்டத்தில் வகைகுறிக்கப்படும் எண்ணை இலக்கத்தில் எழுதுக.

..........................................................

17) பின்வரும் எண்ணை எழுத்தில் எழுதுக.

9080 :- ..........................................................

18) பின்வரும் எண்களை ஏறுவரிசைப்படுத்தி எழுதுக.

7608, 5028, 9706 - ..........................................................

19)

| | | |
|---|---|---|
| 1 | | 23 |
| | 7 | |
| 19 | | 13 |

கட்டத்தினுள் உள்ள எல்லா எண்களைப் பயன்படுத்தி பொது வித்தியாசம் 6 ஆகவுள்ள எண் கோலம் ஒன்றை ஆக்கி எழுதுக.

1, .................., .................., .................., ..................

20) 824 இனை 4 இனால் வகுக்கும் போது பெறப்படும் விடை யாது?

..........................................................

21) ஒரு பாடசாலையில் 2648 பெண்பிள்ளைகளும் 758 ஆண் பிள்ளைகளும் உள்ளனர்.

**(i)** பாடசாலையிலுள்ள மாணவர்களின் மொத்த எண்ணிக்கை யாது?

..........................................................

**(ii)** இப் பாடசாலையில் உள்ள பெண்பிள்ளைகளிலும் பார்க்க எத்தனை ஆண் பிள்ளைகள் குறைவாக உள்ளனர்?

..........................................................

22) இருபத்து நான்கு மணித்தியாலயக் கடிகாரம் 15:30 எனக் காட்டும் போது 12 பன்னிரண்டு மணித்தியாலகடிகாரம் காட்டும் நேரம் யாது?

PAPERMASTER.LK

..........................................................

23) தனது ஊரிற்குச் செல்வதற்காக மோட்டார் சைக்கிளில் புறப்பட்ட விஸ்வா 3மணித்தியாலம் 30நிமிடங்கள் பயணம் செய்த பின்னர் பி.ப 2.00 இற்கு தனது ஊரை அடைந்தான். விஸ்வா புறப்பட்ட நேரத்தை இருபத்து நான்கு மணித்தியாலக் கடிகாரத்தில் காட்டும் விதத்தில் இலக்கங்களில் எழுதுக.

..............................................................................................

24) ஒரு தாங்கியில் 25 லீற்றர் 850 மில்லிலீற்றர் நீரும் வேறொரு தாங்கியில் 13 லீற்றர் 350 மில்லிலீற்றர் நீரும் உள்ளன. எனின் இரண்டு தாங்கிகளிலும் உள்ள நீரின் அளவுகளிடையே உள்ள வித்தியாசம் யாது?

..............................................................................................


25) மூடை ஒன்றில் 5kg 750g மா இருந்தது. அதற்குள் மேலும் 14kg 350g மா இடப்படுகின்றது. எனின் இப்போது மூடையிலுள்ள மாவின் மொத்த நிறை யாது?

..............................................................................................

26) பின்வரும் அட்டவணையைப் பூரணப்படுத்துக.

| பொருள் | அளவு | ஒரு கிலோகிராமின் விலை | | பெறுமதி | |
|---|---|---|---|---|---|
| | | ரூபா | சதம் | ரூபா | சதம் |
| சீனி | 6kg | 130 | 00 | ..................... | ..................... |
| தேயிலை | 750g | ..................... | ..................... | 750 | 00 |

27) **பின்வரும் வரைபை விளங்கி வினாக்களுக்கு விடை தருக. பண்ணை ஒன்றிலிலுள்ள பிராணிகளின் விபரம் பின்வருமாறு**




**i)** பண்ணையிலுள்ள முயல்களின் எண்ணிக்கை மாடு, கிளிகளின் எண்ணிக்கைக்குச் சமனாகும். இதனை வரைபில் குறித்துக்காட்டுக.

**ii)** பண்ணையிலுள்ள அனைத்துப் பிராணிகளின் கால்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

**iii)** அங்குள்ள பசு மாடுகள் தினமும் ஒவ்வொன்றும் 5லீற்றர் பால் கறக்கும் எனின் ஒரு நாளில் எவ்வளவு பால் கிடைக்கும்?

..............................................................................................

**iv)** பண்ணையிலுள்ள பிராணிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

..............................................................................................

PAPERMASTER.LK

28) ஒரு மாணவனுக்கு 6 அப்பியாசப் புத்தகங்கள் வீதம் பகிர்ந்தளிப்பதற்காக ஒரு பாடசாலைக்கு 960 அப்பியாசப் புத்தகங்கள் தேவைப்பட்டன. எனின் அப் பாடசாலையிலுள்ள மாணவர்கள் எத்தனை?

..............................................................................................

29) நகரம் A இலிருந்து B வரையுள்ள தூரம் 3km 500m ஆகும். நகரம் B இலிருந்து C வரையுள்ள தூரம் 8km 750m ஆகும். நகரம் A இலிருந்து நகரம் B இனூடாக நகரம் C வரை உள்ள மொத்தத் தூரம் யாது?

..............................................................................................

● **இலக்கம் 30 தொடக்கம் 59 வரையுள்ள ஒவ்வொரு வினாவிற்கும் பொருத்தமான விடையைத் தரப்பட்டுள்ள விடைகளிலிருந்து தெரிவு செய்து அதன் கீழ்க் கோடிடுக.**

30) பின்வருவனவற்றுள் இயற்கை அனர்த்தமாக **அமையாதது** எது?
(1) வாகனவிபத்து (2) மின்னல் தாக்கல் (3) வெள்ளப்பெருக்கு

31) நிழலில் வளர விரும்பும் தாவரம் பின்வருவனவற்றில் எது?
(1) அந்தூரியம் (2) ரோசா (3) அல்லி

32) தாவர இலைகளை உணவாக உட்கொள்ளும் பிராணி
(1) மயிர்க்கொட்டி (2) தேனீ (3) வண்ணத்துப்பூச்சி

33) தனது உடம்பினை விட நீளம் கூடிய நாக்கை கொண்ட விலங்கினம் எது?
(1) கிவி (2) பச்சோந்தி (3) பென்குயின்

34) பூச்சிகளை உண்ணும் தாவரம் எது?
(1) செவ்வந்தி (2) அறுகு (3) துரோசிரா

35) கோழியினால் பரவக்கூடிய நோய் எது?
(1) வாந்திபேதி (2) பறவைக் காய்ச்சல் (3) அவிர்காய்ச்சல்

36) தேசப்படங்களில் பிரதான வீதியைக் காட்டும் நிறம் எது?
(1) சிவப்பு (2) நீலம் (3) கறுப்பு

37) திஸ்ஸவாவி அமைந்துள்ள மாவட்டம் எது?
(1) அநுராதபுரம் (2) கண்டி (3) புத்தளம்

38) பெரும்பாலும் ஆடைகளில் அல்லது விலங்குகளின் உடல்களில் ஒட்டி பரம்பலடையும் வித்து
(1) எண்ணை (2) துத்திரி (3) எருக்கலை

39) வெப்பமானியில் பயன்படுத்தப்படும் திரவ உலோகம் யாது?
(1) இரசம் (2) மக்னீசியம் (3) செம்பு

40) குமண பறவைகள் சரணாலயம் அமைந்துள்ள மாவட்டம் எது?
(1) அம்பாறை (2) புத்தளம் (3) கொழும்பு

PAPERMASTER.LK

41) “**இலவசக்கல்வியின் தந்தை**” என அழைக்கப்படுபவர்?

(1) கலாநிதி. சீ. டபிள்யு. டபிள்யு. கன்னங்கரா

(2) கலாநிதி சேர்.பொன். இராமநாதன்

(3) கலாநிதி ஆனந்த குமாரசுவாமி

42) சப்தரிசி மண்டலம் என அழைக்கப்படும் உடுத்தொகுதி எது?

(1) கலப்பை (2) பெருநாய் (3) வேட்டைக்காரன்

43) SLDA என்பது

(1) இலங்கையின் அபிவிருத்தி தொடர்பான குறியீடு

(2) இலங்கையின் தரமான பண்டங்கள் தொடர்பான குறியீடு

(3) இலங்கையின் பற்பசைக்கு வழங்கப்படும் குறியீடு

44) கப்பி வகைக்குள் அடங்காத உபகரணம் எது?

(1) நெல் குற்றும் இயந்திரம் (2) மின் பாரம் தூக்கி (3) பாரம் தூக்கி

45) அதிகளவு மின்சக்தியை நுகரும் மின்குமிழ் எது?

(1) CFL மின்குமிழ் (2) LED மின்குமிழ் (3) திரண்ட இழை கொண்ட மின்குமிழ்

46) தேசியக் கொடியைச் சூழவுள்ள மஞ்சள் நிறத்தினால் குறிக்கப்படும் விடயம் தொடர்பான சரியான விடையினைத் தெரிக.

(1) தேசிய ஒற்றுமையும், கொடியின் முழுமைப்பாடும்.

(2) தேசிய ஒற்றுமையும், வீரமும்.

(3) கொடியின் முழுமையும் கட்டுப்பாடான நாட்டு மக்களும்.

47) இலங்கைத் தேசப்படத்தில் சரணாலயம் எந் நிறத்தினால் குறிப்பிடபட்டிருக்கும்?

(1) நீலம் (2) பச்சை (3) சிவப்பு

48) சிகிரியா ஓவியத்தில் பெண்கள் கையில் வைத்திருக்கும் மலர் எது?

(1) நீலோற்பலம் (2) தாமரை (3) அலரி

49) தொல்பொருள் பெறுமதிமிக்க இந்துக்களின் சிவன் கோயில் இலங்கையில் அமைந்துள்ள நகரம் எது?

(1) சிலாபம் (2) அநுராதபரம் (3) பொலன்னறுவை

50) எமக்குத் தகவல்களை “நேரடி” ஆக வழங்கத்தக்க ஓர் ஊடகம் எது?

(1) பத்திரிகை (2) வானொலி (3) கையேடுகள்

51) வீட்டுத் தோட்டத்தில் பயிர்களுக்கு இடையில் செவ்வந்திப் பயிரைப் பயிரிடுவதன் முக்கிய நோக்கம் யாது?

(1) வீட்டுத் தோட்டத்தில் இட அளவை உச்ச அளவில் பயன்படுத்துவதற்கு

(2) வீட்டுத் தோட்டத்திற்கு அழகைச் சேர்ப்பதற்கு

(3) பயிர்களுக்குச் சேதம் விளைவிக்கும் பூச்சிகளை விரட்டுவதற்கு


PAPERMASTER.LK

52) வீதி சமிக்ஞை விளக்குகளின் தூணில் மஞ்சள் நிற மின்குமிழ் எரியும் போது அதனால் கருதப்படுவது யாது?

(1) "வாகனத்தை நிறுத்துக" என்பதாகும்.

(2) "வாகனம் புறப்பட ஆயத்தமாதல்" என்பதாகும்.

(3) "வாகனத்தை பயணிக்குக" என்பதாகும்.

53) 

இலங்கைத் தேசப்படத்தில் நிறந்தீட்டிக் காட்டப்பட்டுள்ள மாகாணங்கள் இரண்டும் எவை?

(1) வடமாகாணம், வடமத்திய மாகாணம்

(2) வடமாகாணம், தென்மாகாணம்

(3) கிழக்கு மாகாணம், வட மாகாணம்

54) அன்னாசிப் பிஞ்சை உண்பதால் ஏற்படக் கூடியது

(1) வயிற்றுவலி (2) வாந்தி (3) உதடுவீக்கம்

55) மனிதன் தொடர்பாடலுக்காக ஆதிகாலத்தில் பயன்படுத்திய முறை, நவீன காலத்தில் பயன்படுத்தும் முறை என்பவற்றை ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடை எது?

(1) தீக்குவியல் மூட்டலும் தொலைபேசிப் பாவனையும்.

(2) முரசறைதலும் தீக்குவியல் மூட்டலும்.

(3) மின்னஞ்சல் பயன்படும் தொலைபேசி பாவனையும்.

56) சிவப்புடன் நீலத்தைச் சேர்ப்பதால் பெறப்படும் நிறம் யாது?

(1) கறுப்பு (2) ஊதா (3) பச்சை

57) பின்வருவனவற்றுள் கஞ்சக்கருவிகளைக் கொண்ட விடை

(1) கொம்பு, றம் (2) யாழ், உடுக்கு (3) சலங்கை, மரக்கால்

58) இலங்கைக்கே உரித்தான ஈருடக வாழியையும் முலையூட்டி விலங்கினையும் ஒழுங்கு முறையில் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய்க.

(1) மரத்தேரை, மூஞ்சூறு (3) மரநாய், சுண்டெலி

(2) நரைப்புழுனி, கருங்குரங்கு

59) தியலும, ரம்பொட, கிரிந்த எல்ல என்பவை இலங்கையின்

(1) மூன்று மலைகள் (2) மூன்று நீர்வீழ்ச்சிகள் (3) மூன்று ஆறுகள்

60) **இன்றைய உலகில் அதிகரித்து வரும் மக்கள் தொகைக்கு ஏற்ப உணவு உற்பத்தியையும் அதிகரிக்க வேண்டிய தேவை விவசாயத்துறை சார்ந்த தொழில் புரிபவர்களின் கையிலே உள்ளது.** அந்தவகையில் **விவசாயத்தின் அவசியம்** பற்றி மூன்று வாக்கியங்கள் எழுதுக. (ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்குக் குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்பும் எழுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..............................................................................................................................

2. ..............................................................................................................................

3. ..............................................................................................................................

❖ ❖ ❖

PAPERMASTER.LK